# சிறுபான்மை மொழிப்பின்னணியுடைய மாணவர்களுக்குரிய பிரத்தியேக மொழிப்பயிற்சிக்கான உரிமை பற்றிய தகவல்

பிரத்தியேக மொழிப்பயிற்சி மூன்று பகுதிகளை கொண்டுள்ளது:

- பிரத்தியேக நோர்வேயிய மொழிப்பயிற்சி: மேலதிக தகுந்த நோர்வேயிய மொழியிலான மொழிப்பயிற்சி
- இருமொழியிலான பாடக்கல்வி :நோர்வேயிய மொழியில் பாடக்கல்வி மற்றும் இரு மொழி ஆசிரியரால் மாணவரின் தாய்மொழியில் பயிற்சி
- தாய்மொழி பயிற்சி: மாணவரின் தாய்மொழியில் பயிற்சி

கல்விப்பயிற்சி சட்டம் §§ 2-8 மற்றும் 3-12சிறுபான்மை மொழிப்பின்னணியுடைய மாணவர்களுக்குரிய பிரத்தியேக மொழிப்பயிற்சி பற்றி வரையறுப்பதாவது:

> நோர்வேயிய மற்றும் சாமிய மொழி தவிர்ந்த பிற மொழியை தாய்மொழியாக் கொண்ட மாணவர்[ஆரம்ப பாடசாலை/உயர்கல்வி பயிற்சி] பாடசாலையில் சாதாரண கல்விப் பயிற்சியை பின்பற்றுவதற்கு தகுந்த போதுமானளவு நோர்வேயிய மொழி திறமைகளைப் பெறும் வரை பிரத்தியேக நோர்வேயிய மொழிப்பயிற்சியை பெறும் உரிமையைக் கொண்டுள்ளனர். இவ்வாறான மாணவர்கள் அவசியமெனில் தாய்மொழிபயிற்சி இருமொழியிலான பாடக்கல்வி அல்லது இரு பிரிவினையும் பெறுவதற்கான உரிமையையும் கொண்டுள்ளனர்.
>
> சாதாரணமாக மாணவர் செல்லும் பாடசாலை தவிர வேறொரு பாடசாலையில் தாய்மொழிக்கல்வி ஏற்பாடு செய்யப்படலாம்.
>
> தாய்மொழிப்பயிற்சி மற்றும் இரு மொழியிலான பாடக்கல்வியை தகுதி பெற்ற ஆசிரியரால் வழங்கப்பட முடியாதவிடத்து, [நகரசபை/பிராந்தியசபை] மாணவரின் தகைமைகளுக்கேற்றபடி வேறொரு பயிற்சியை இயன்றவரை ஒழுங்கு செய்ய வேண்டும்

பிரத்தியேக நோர்வேயிய மொழிப்பயிற்சியானது நோர்வேயிய மொழியில் கல்வியை பின்பற்ற முடியாதளவு குறைந்த நோர்வேயிய மொழியறிவையுடைய மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. தாய்மொழிப்பயிற்சி மற்றும் இரு மொழியிலான பாடக்கல்வியானது மாணவருக்கு தேவைப்படும் பட்சத்திலும் அத்துடன் புதிதாக வந்தவர்களும் மற்றும் நோர்வேயிய மொழியில் ஓரளவேனும் கல்வியைப் பின்பற்றுவதற்குரிய நோர்வேயிய மொழித்தகைமையைக் கொண்டிராத சிறுபான்மை பின்னணியுடைய வேறு மாணவர்களும் இதனைப் பெறும் உரிமையைக் கொண்டுள்ளனர்.

சாதாரண பயிற்சியை பின்பற்றுவதற்கேற்றவாறு மாணவர் இயன்றவரை விரைவில் நோர்வேயிய மொழியை சிறந்தவாறு கற்றுக்கொள்வதே பிரத்தியேக மொழிப்பயிற்சியின் நோக்கமாகும். போதியளவு நோர்வேயிய மொழியறிவை மாணவர் பெற்றுக்கொண்டதும், தொடர்ந்து மாணவருக்கு பிரத்தியேக மொழிப்பயிற்சி வழங்கப்படமாட்டாது.

பிரத்தியேக மொழிப்பயிற்சியை பாடசாலை சிபாரிசு செய்யும் போது என்ன நிகழும்?

- மாணவரின் நோர்வேயிய மொழியறிவைபாடசாலை மதிப்பிடும்.
- பாடசாலை மாணவர்/பாதுகாவலருக்கு முன்னறிவித்தலை அனுப்புவதுடன் பிரத்தியேக மொழிப்பயிற்சி பற்றிய தனியான தீர்மானத்தை எடுக்க சம்மத்தையும் கோரும்.
- மாணவர்/பாதுகாவலர் இதற்கு சம்மதம் வழங்குவர் அல்லது வழங்காது இது பற்றி பாடசாலைக்கு தெரிவிப்பார்.
- மாணவர்/பாதுகாவலர் சம்மதம் வழங்கும் பட்சத்தில் பாடசாலை தீர்மானத்தை ஏற்படுத்தி அதனை மாணவர்/பாதுகாவலருக்கு அனுப்பி வைக்கும்.

- மாணவர்/பாதுகாவலர் சம்மதம் வழங்காத பட்சத்தில் பாடசாலை தீர்மானம் எதையும் ஏற்றபடுத்தாது. அவ்வாறாயின் மாணவர் நோர்வேயிய மொழியில் சாதாரண பயிற்சியைப் பின்பற்றுவார்.
- தீர்மானத்தை மாணவர்/பாதுகாவலர் முறையீடு செய்யலாம்.

மாணவர்/பாதுகாவலர் பிரத்தியேக மொழிப்பயிற்சியிற்கு விண்ணப்பிக்கும் போது என்ன நிகழும்?

- பாடசாலைக்கு மாணவர்/பாதுகாவலர் விண்ணப்பத்தை அனுப்புவர்.
- பாடசாலை மாணவரின் நோர்வேயிய மொழியறிவை மதிப்பிடும்.
- மாணவருக்கு பிரத்தியேக மொழிப்பயிற்சி அவசியமா இல்லையா என பாடசாலை பரீசீலனை செய்யும்.
- பாடசாலை தீர்மானத்தை ஏற்படுத்தும்.
- தீர்மானத்தை மாணவர்/பாதுகாவலர் முறையீடு செய்யலாம்.